# மூணாங்கொடி நாவல் காட்டும் தலித்தின மக்களின் கல்வி நிலை

**திருமதி.மா.சபிதா**

ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, எம்.வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல். மின்அஞ்சல்முகவரி: sabitha0605@gmail.com

---

## முன்னுரை:

*“நல்ல காலம் வருகுது: நல்ல காலம் வருகுது:*

*சாதிகள் சேருது: சண்டைகள் தொலையுது*

*சொல்லடி, சொல்லடி. சக்தி, மாகாளீ!”*[1]

என்று பாரதியார் சாதி ஒழிப்பு பற்றி தம் பாடலின் வழியாக புரட்சிக் கருத்தைக் கூறுகிறார். மக்களிடையே அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு பிரிவுகள் இருந்து வந்துள்ளமை அறியக் கிடைக்கின்றது. காலப்போக்கில் இந்நான்கு பிரிவுகளும் அவர்கள் வேலை செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல பிரிவுகளாகப் பிரிந்தன. இதுவே சாதி தோன்றுவதற்கு அடிப்படைக் காரணியாக அமைந்தது. அவர்கள் செய்யும் தொழிலைக் கொண்டே இனங்காணப்பட்டனர். இவ் அடிப்படையில் ரகுதேவனால் எழுதப்பட்ட மூணாங்கொடி என்னும் நாவல் தலித் இன மக்களின் கல்வி நிலைக் குறித்து விளக்க முனைகிறது இக்கட்டுரை.

## தலித் - சொற்பொருள் விளக்கம்:

‘தலித்’ என்னும் சொல் முதலில் மராத்திய மாநிலத்தில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களைக் குறிப்பதாக இருந்தது. பிறகு இந்திய அளவில் பொதுவான பெயராகக் கொள்ளப்பட்டது. ஆனால் “தமிழக அளவில் தாழத்தப்பட்டோர் என்பது வழக்கில் இருந்தாலும் தேசிய அளவில் பரந்துபட்ட மக்களின் சொல்லாட்சியான தலித், தலித்தியம் என்பது வழக்கில் இங்கு இருப்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது”[2].

தலித் என்னும் சொல்லானது அனைவரையும் பொதுவாகக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர். ஆனால் தமிழகத்தில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோர், தீண்டப்படாதோர் என்னும் சொல்லே வழக்கில் இருக்கிறது. இவ்வாறு தலித் என்னும் சொல் அனைவருக்கும் பொருந்துமா என்பது ஐயத்திற்குரியதாக உள்ளது. நாடோடிகளாக இருந்த மக்களை தீண்டப்படாதோர் என்றும் கூறுகின்றனர். இவற்றினை ஒப்பிட்டு நோக்கும்

போது தலித்தின மக்களுக்கும், தீண்டப்படாதோர் என்று அழைக்கப்படுவோருக்கும் வேறுபாடு உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இவ்வின மக்கள் வெளியிலிருந்து நோக்குவோருக்கு வேறுபாடில்லாமல் ஒரே இனத்தைச் சேர்ந்தவராகத் தெரிவர்.

## மூணாங்கொடி நாவலில் தலித் மக்களின் நிலை:

*“சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்*

*தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்:*

*நீதி, உயர்ந்த மதி, கல்வி – அன்பு*

*நிறைய உடையவர்கள் மேலோர்”*[3]

என்று பாரதியார் நீதியும், உயர்ந்த மதிநுட்பமும், நல்ல கலிவியும் எவர் பெற்றிருக்கிறாரோ அவரே மேலோர் என்று தன் கவிதையின் வாயிலாகப் புலப்படுத்துகிறார். ஆனால் இந்நாவலில் காணப்படும் ஊர்ப்பெயரில் கூட சாதிப்பிரிவு காணப்படுகிறது. மேல்சாதிக்காரர்கள் இருக்கும் பகுதி மேலப்பாளையம் என்றும், கீழ் சாதிக்காரர்கள் இருக்கும் பகுதி கீழப்பாளையம் (சேரித்தெரு) என்றும் அழைக்கப்பட்டது. கீழத்தெருவைச் சேர்ந்த மக்கள் உயர்சாதிக்காரர்களுக்கு அடிமைப்பட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. இம்மக்கள் வசிக்கும் இடங்களில் அடிப்படைத்தேவைகள் கூட இல்லாத நிலை இருக்கிறது. தண்ணீர் எடுப்பதற்குக் கூட மேலத்தெருவிற்குச் செல்லும் நிலை உள்ளது. அவ்வாறு சென்றாலும் நீண்ட நேரம் காத்திருந்து அவர்கள் பிடிக்க வேண்டிய கட்டாயம் நிலவியது.

“உலக நாடுகளிலுள்ள நலிந்த மக்களின் தாழ்நிலைக்கும் அவர்களது பொருளாதாரப் பிற்போக்கு நிலையே காரணமாக இருக்கும் போது, இந்தியாவின் ஐந்தில் ஒருபங்கு மக்களின் பின்னடைந்த நிலைக்குத் தீண்டாமை என்ற ஒரு விநோதமான மனித இன துவேஷம் அல்லது சமூக ஒதுக்கல் முறை மட்டுமே காரணமாக இருந்து வருவது வெளிப்படையான உண்மை”[4].

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்நாவலில் அடையாளம் காட்டப்படும் மக்களின் வேலை துப்புரவுத்தொழில் ஆகும். நாட்டினைத் தூய்மைப்படுத்தும் மக்களை தீண்டத்தகாதவர்கள் என்று அழைப்பது நாவலில் இனங்காட்டப்படும் செய்தியாகும். ஆனால் இவ்வாறு இனங்காட்டப்படும் மக்கள் தங்கள் வேலையைத் தாழ்வாகக் கருதவில்லை. அடுத்தவரிடம் கையேந்தாதது சுயமாக சம்பாதிக்கும் எந்தத் தொழிலும் தாழ்ந்தது கிடையாது என்னும் அடிப்படை மனித வாழ்வியல் தத்துவத்தைக் கைக்கொண்டு வாழும் மனிதர்களாக நாவலில் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். செய்யும் தொழிலை தெய்வமாக

எண்ணினர். இம்மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று எண்ணப்பட்டாலும் சுயமரியாதையுடன் இருக்க எண்ணினர். ஆனால் உயர்ந்தோர் என்று சொல்லிக் கொண்டவர்கள் தங்கள் முன்னோர்களின் சொத்துக்களை சார்ந்து அவற்றினை நம்பியே பிழைத்துக் கொண்டிருந்தனர். இவ்விரு இனமக்களையம் ஒப்பு நோக்கும் போது தாழ்ந்தவர்கள் யார் என்பதை நாம் கண்கூடாகக் காணலாம்.

### கல்வி நிலை:

**“கேடில் விழுச்செலவம் கல்வி யொருவருக்கு**

**மாடல்ல மற்றை யவை”[5]**

உலகில் அழியாத சிறந்த செல்வமானது கல்வி மட்டுமே ஆகும். மற்ற செல்வங்கள் எல்லாம் ஒருவருக்கும் சிறந்த செல்வமாக இருக்காது. மூணாங்கொடி நாவலானது கல்வியை முதன்மையாகக் கொண்டுள்ளது. ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால் அதற்கு கல்வி மிக மிக அவசியம். கல்வியினால் அச்சமுதாயமானது மிக அரிய மாற்றங்களைப் பெறுமென்பது உண்மையே. பெற்றோர்களின் துன்பங்களை எண்ணும் பிள்ளைகள் கல்வியில் முனனேற்றம் காண்பர். ஏனெனில், அவர்கள் தங்கள் கடமையை உணர்ந்துச் செயல்படுவர்.

***“களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்***

***விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்***

***னடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்***

***தலைநிலத்து வைக்கப்படும்”[6]***

என்று நாலடியார் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் கல்வியினால் உயர்ந்த நிலையை அடைவர் என்பதை நமக்குப் புலப்படுத்துகிறது. அவ்வாறே மூணாங்கொடி, நாவலில் வரும் வேல்முருகன், கௌதமன் ஆகிய இருவரும் தங்கள் கல்வியில் முன்னேற்றம் கண்டனர். வேல்முருகன் நாட்டிலேயே முதலாவது மாணவனாக வெற்றிப்பெற்று முதலமைச்சர் கையினால் பாராட்டுப்பத்திரம் வாங்கினான். இதனைக் கண்ட பிரசிடண்டு ஜெகதீசன், “ஒரு பறப்பையன், அவன் அப்பன தோட்டிவேலை செய்யறான். வகுத்து ஜீவனத்துக்கு வழியில்லாம சம்பாரிச்சத்தான் கஞ்சிங்கற நெலமைல இக்கறவமுட்டு பையன் முதல்ல வந்திருக்கறான், பத்துப்பைசாவுக்கு அருகதையில்லாதவ மூட்டுப் புள்ளைகளெல்லாம் எவ்வளவு வெவரமா படிச்சு மேல்படிப்புக்கு போகுதுக! நம்ம பெத்ததுகளுந்தான் இருககுது”[7] என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

முன்சீப் வினைதீர்த்தான் என்பவர் இப்பிள்ளைகள் கல்லூரியில் சேர்ந்து படிப்பதை விரும்பவில்லை. அதனால் அக்கல்லூரி நிறுவனர்களிடம் தொடர்புக் கொண்டு அப்பையன்களை கல்லூரியில் சேர்க்காதீர்கள் என்றும், அச்சாதிக்காரர்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும் நமக்குச் சரிசமமாக அமர்ந்து வேலை செய்யும் இடத்தைக் கொடுக்காதீர்கள் என்று கூறிவந்தார். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அரசாங்கத்திடம் இருந்துவரும் உதவித்தொகையைக் கொண்டு கல்லூரி நிர்வாகம் நடப்பதாக கைலாசம் முன்சீப்பிடம் கூறுகிறார். இதனால் மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவித்தொகை கிடைக்காமல் இருந்தது. இருப்பினும் தங்கள் கல்வியை கைவிட்டுவிடாமல் பற்றிக் கொண்டனர்.

அதன் விளைவாக கௌதமனுக்கு ‘டி.என்.பி.சி’ எழுதி ‘டெப்டி கலெக்டர்’ வேலையும். வேல்முருகனுக்க கவர்மெண்டு கல்லூரியில் வாத்தியார் வேலையும் கிடைத்தது. இதைக் கண்ட மேலத்தெருக்காரர்கள் பொறாமைக் கொண்டனர். முன்சீப் தன் சாதிக்காரர்கள் மட்டுமே படிக்க வேண்டும் என்றும், மற்ற சாதிக்காரர்கள் படிக்கக் கூடாது என்றும் எண்ணினார். ஆனால் அது முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் உழைப்பையும், பணத்தையும் சுரண்டிய அவரால், அம்மாணவர்களின் படிப்பை வாங்க முடியவில்லை. அவர்களின் அறிவையும் சுரண்ட முடியவில்லை.

வேல்முருகனும், கௌதமனும் நல்ல வேலையில் இருந்தாலும் சாதியினைக் கொண்டு அவர்களை தரம்தாழ்த்தி நடத்தினர். இது அவர்களுக்கு மன உளைச்சலைக் கொடுத்தது. இருப்பினும் அவற்றில் போராடி வெற்றியும் பெற்றனர். கௌதமன் தனக்கு வரவேண்டிய பதவி உயர்வை நீதிமன்றத்தின் வாயிலாக பெற்றான். வேல்முருகனும் நீதிமன்றத்தை நாட வேண்டிய சூழ்நிலை இருந்தது.

அரசாங்கத்தில் இருந்து மருத்துவமனைக் கட்ட அனுமதி கொடுத்திருந்தனர். அதுவும் மேலப்பாளையத்தில் தான் கட்டினர். அம்மருத்துவமனையின் டாக்டர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். அதனால் அவருக்குக் கீழ் தன்னால் வேலைச் செய்ய முடியாது என்றுச் சொல்லி மேலப்பாளையத்து நர்ஸ், பணிமாற்றம் வாங்கிக் கொண்டுச் சென்றுவிட்டார். தலித் சமூகத்தைச் சார்ந்த நர்ஸ்சும், மருத்துவரும் அங்கே இருந்ததனால் மேலப்பாளையத்து மக்கள் அம்மருத்துவமனைக்குச் செல்வதனைத் தவிர்த்து வந்தனர். கீழப்பாளையத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமே அங்கு சிகிச்சைப்பெற்று வந்தனர்.

மருத்துவர் தலித்தினத்தைச் சேர்ந்தவர் என்னும் ஒரே காரணத்தினால் அம்மக்கள் மருத்துவமனைக்கு வராமல் இருப்பது அவர்களின் அறியாமையேயாகும். கல்வியானது சாதியினை அழியச்செய்துவிடும் என்பதை குணசீலன் மேலப்பாளையத்துக்காரன் படித்தவன். இருப்பினும் கீழப்பாளையத்து பையன்களிடம் மாமன், மச்சான் என்று நெருக்கமாக சாதி

வேறுபாடில்லாமல் பழகக்கூடியவன், அதனால் தான் தலித் சமூகத்தைச் சேர்ந்த பிருந்தாவை காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செயதுக் கொள்கிறான. பிருந்தா இங்கிலீஸ் டீச்சராக வேலைப் பார்த்து வந்தாள். இவர்கள் கற்ற கல்வியால்தான வாழ்வில் ஒன்றிணைய முடிந்தது.

வேல்முருகன், வேலைப் பார்க்கும் கல்லூரியில் உள்ள பேராசிரியர்கள் தலித்தின மாணவர்களிடம் நல்லவிதமாகப் பேசி அவர்களை தங்கள் சொந்த வேலைகளைச் செய்ய பயன்படுத்திக் கொண்டனர். இதனை அறியா மாணவர்கள் அவர்கள் சொற்படி நடந்து வந்தனர். வேல் முருகனும் இதனைச் சுட்டிக்காட்டியபோது அவன்மேல் கோபம் கொண்டனர். பின் அம்மாணவர்களாக உண்மை நிலையை உணர்ந்து தெரிந்து தெளிந்தனர். வேல்முருகனிடம் தங்கள் தவறுகளை நினைத்து வருந்தினர். தங்கள் கடமைகளையும், பொறுப்புகளையும் உணர்ந்து செயல்பட தொடங்கினர். கல்வியின் முக்கியத்துவத்தை வேல்முருகனின் வாயிலாக அறிந்துக் கொள்வதற்கு இச்சம்பவம் வாய்ப்பாக அமைந்தது..

## ஆய்வு முடிவுகள்:

- தலித்தின மக்கள் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.
  அவர்களுக்கு உரிய இடம் முழுமையாக வழங்கப்படவில்லை என்பதை இதன் வாயிலாக அறியலாம். இருப்பினும் எதனையும் பொருட்படுத்தாமல் தங்கள் இலக்குகளை நிறைவேற்ற முழு அளவில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு வெற்றியும் காண்கின்றனர்
- கல்வியில் இன்றளவிலும் அவர்கள் பிரித்து வைத்துதான் பார்க்கப்படுகின்றனர் என்பது நாவல் செய்தி
- இந்நிலை மாறி நன்னிலை எய்தின் அடிப்படை வேற்றுமை களைந்து ஒன்றுப்பட்ட மனித குல அறவினால் வையம் தழைத்தோங்கும்.

## சான்றெண் விளக்கம்

1. அருணா, பாரதியார் கவிதைகள், ப-413
2. பா. இதயவேந்தன், தலித் அழகியல், ப-19
3. அருணா, மு.நூ, ப-237
4. ப. சீனிவாசன், தீண்டாமையைத் தீயிடு, ப-14
   ஞா. ம
5. ாணிக்கவாசகன், திருக்குறள் எளியஉரை, ப-99
6. ஞா. மாணிக்கவாசகன், நாலடியார் தெளிவுரை, ப-54
7. ந. இரகுதேவன், மூணாங்கொடி, ப-18